09.02.2026

O.S.No. 119/2023

PW1– வேலாயுதம் – த/பெ. சந்திரசேர்

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 09.02.2026

<u>குறுக்கு விசாரணை :</u> ( 3ம் பிரதிவாதி தரப்பில்)

1. பிராது தபசில்சொத்து ஆதியில் சந்தனராமசாமி தேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். அவருக்குபின்பு அவரது மகன்கள் வேலாயுததேவரும், வீரபுத்திர தேவரும் அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். அவர்கள் பெயரில்தான் பட்டா எண்.674, 696 பட்டா ஏற்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்துக்களை பொறுத்தவரை மேற்படி நபர்கள் பாகம் பிரிக்காமல் அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரிதான்.

2. சந்தனராமசாமி தேவருக்கு நான் தான் வாரிசு என்பதை காட்ட வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு நான் வாரிசு கிடையாது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த கொடிவழி தவறானது என்றால் சரியல்ல.

3. வழக்கு சொத்து சம்பந்தமாக வாதிகளின் பெயரில் உரிமை மூலஆவணமோ, பட்டாவோ இல்லை என்றால் சரிதான், எனது தாத்தாவின் பெயரில் உள்ளது. வழக்கு சொத்து பொறுத்து எனக்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல.

4. வா.சா.ஆ.2 மற்றும் 3 ஆவணங்களில் மேற்படி ஆவணங்கள் எந்த கிராமம் சம்பந்தப்பட்டது என துலங்காது என்றால் சரிதான்.

வா.சா.ஆ.4 ஆவணமானது வழக்கு சொத்திற்கான ரசீது இல்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.5 வழக்கு சொத்து சம்பந்தப்பட்டது கிடையாது என்றால் சரியல்ல.

5. வேலாயுத தேவரும், வீரபுத்திரதேவரும் பிரதிவாதியின் முன்னோருக்கு 22.12.1973 ல் கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. வழகசு சொததில்அவர்கள் அனுபவம் செய்துவந்தார்கள் என்றால் சரியல்ல. வழக்கு சொத்திற்கு ஆதிமூலத்தேவர், சண்முகத்தேவர் பெயரில் பட்டா எண்.949 ஏற்பட்டது என்றால் எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்படி நபர்களுக்குபின்பு அவரது வாரிசுகளான பிரதிவாதிகள் ஆண்டு அனுபவம் செய்துவருகிறார்கள் என்றால் சரியல்ல.

6. வழக்கு சொத்தில் பிரதிவாதியின் பெயரில் பட்டா ஏற்பட்டது என்றால் யூடிஆர்க்கு பின்பு ஏற்பட்டது. 2010 மற்றும் 2012 ஆண்டுகளில் 3 ம் பிரதிவாதிக்கு அவரது தாயரும், அவரது சகோதரிகளும் விடுதலை ஆவணம் எழுதிக்கொடுத்துள்ளார்கள் என்றால் சரிதான். ஆவணம் 2010 மற்றும் 2012 லேயே எனக்கு தெரியும், ஆனால் வழக்கிற்காக பொய்யாக தற்போதுதான் தெரியும் என கூறுகிறேன் என்றால் சரியல்ல.

7. 2010 மற்றும் 2012 ஏற்பட்ட ஆவணங்களுக்கு தற்போது செல்லாது என கோரும் விளம்புகை பரிகாரம் காலாவதி தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து 3 ம் பிரதிவாதி அனுபவத்தில் இருந்துவருவதால் நான் விளம்புகை பரிகாரம் கேட்காமல்

நான் தாக்கல் செய்த வழக்கு செல்லலத்தக்கதல்ல என்றால்சரியல்ல. 3ம் பிரதிவாதிக்கு ஆவணத்தை ஏற்படுத்திகொடுத்த அவரது தாய், சகோதரியை சேர்க்காததால் எனது வழக்கு அவசிய தரப்பினரை சேர்க்காத தோஷத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

8. 1 முதல் 3ம்பிரதிவாதிகளை நீக்கரவு செய்ய நான் கொடுத்த மனுவின் விவரம் எனக்கு தெரியாது என்றால் சரிதான். எனக்காக எனது வழக்கை 1,2 பிரதிவாதிகள் தான் நடத்திவருகிறார்கள் என்றால் சரிதான். 1,2 பிரதிவாதிக்கும், 3ம் பிரதிவாதிக்கும்இடையே மனஸ்தாபம் ஏற்பட்டது என்றால் சரிதான், அதனால் 1,2 பிரதிவாதிகள் என்னை வைத்து பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல. நான் 1,2 பிரதிவாதிகளுக்கு எதிராக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒம்/-K.N.குரு
கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிபதி
தென்காசி